# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2289/42 - 2022 ජූලි මස 22 වැනි සිකුරාදා - 2022.07.22

*2289/42 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்***

*64(5) ஆம் பிரிவின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்*

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றான ஐக்கிய தேசியக் கட்சியினால் பெயர்குறித்து, அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளமையினால் அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து கேட்டு விலகியமை காரணமாக அரசியலமைப்பின் 66 (இ) ஆம் உறுப்புரைப் பிரகாரம் 9 ஆவது பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியொன்று வெற்றிடமாகியுள்ளதென, 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார் ஆதலாலும்,

அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கென அந்த அரசியற் கட்சியின் செயலாளருக்கு மேலே குறிப்பிடப்பட்ட பிரிவின் கீழ் தகைமையுடைய அக்கட்சியின் அங்கத்தவரொருவரை பெயர்குறித்து நியமிக்கும்படி தேர்தல் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளமையினாலும்;

மேற்கூறப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. வஜிர அபயவர்தன என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவின் கீழ் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சனாதிபதிப் பதவியில் நியமிக்கப்பட்டமையின் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. வஜிர அபயவர்தன அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனத் தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

நிமல் ஜீ. புஞ்சிஹேவா
தவிசாளர்
தேர்தல் ஆணைக்குழு

எஸ். பி. திவாரத்ன
அங்கத்தவர்
தேர்தல் ஆணைக்குழு

எம். எம். மொஹமட்
அங்கத்தவர்
தேர்தல் ஆணைக்குழு

கே. பீ. பீ. பத்திரண
அங்கத்தவர்
தேர்தல் ஆணைக்குழு

பீ. எஸ். எம். சார்ள்ஸ்
அங்கத்தவர்
தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
2022 யூலை மாதம் 22 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.